# 11

# கிறிஸ்துவின் மணவாட்டி

*"நான் உங்களைக் கற்புள்ள கன்னியாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால் ..." (2 கொரி. 11:2).*

ஹார்டிங் பல்கலைக்கழகத்தின் பெண் மாணவிகள் சிலர், "தேவன் மனிதனை (ஆணை) ஏன் முதலில் படைத்தார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர் தம்முடைய மிகச் சிறந்த படைப்பை (பெண்ணை) ஏற்படுத்துவதற்கு முன், திருத்தம் செய்ய வேண்டிய மாதிரி ஒன்றை ஏற்படுத்த விரும்பினார்" என்று நகைச்சுவையாகக் கூறுவதுண்டு. எல்லா வித வேடிக்கைப் பேச்சும் ஒரு பக்கம் இருக்க, தேவனுடைய வடிவமைப்பின் படி பெண் என்பவள் ஒரு அழகு நிறைந்த படைப்பாக தேவனுடைய படைப்பு முழுவதிலும் மிகவும் அழகு நிறைந்தவளாக இருக்கின்றாள்.

ஒரு பெண் தனது திருமண நாளில் இருப்பதைக் காட்டிலும் மிக அழகுள்ளவளாக வேறு எந்த நாளிலும் ஒருக்காலும் இருப்பதில்லை. எந்தக் கணவன் தனது மனைவி தங்கள் திருமண நாளன்று தன் இருதயத்தையும் வாழ்வையும் அவருக்கு வாக்களிக்க வருகையில் அவள் கொண்டிருந்த ஒளி வீசும் அழகை மறக்க முடியும்? அந்த வேளையில் அவள் கொண்டிருந்த விரும்பப்படக் கூடிய தன்மையானது முதிர் வயது அவரது நினைவை முக்காடிட்டு மூடும் வரை அல்லது மரணம் அவரை உரிமைகோரும் வரை அவரது மனதில் அச்சடிக்கப்பட்டதாகத் தங்கியிருக்கும்.

"மணவாட்டி" என்ற வார்த்தையானது நமது மனதில் இருந்து வெளிக் கொண்டு வருகின்ற தூண்டுதல் மற்றும் உணர்வு ஆகியவைபோல வேறு எந்த சாயலும் சபையைப் பற்றிய கருத்தைக் கொண்டு வரச் சாத்தியக் கூறு இருக்க முடியாது. சபையைப் பற்றிய புதிய ஏற்பாட்டு உருவகம் எல்லாவற்றிலும் இது ஒருவேளை மிக மேன்மையான சித்தரிப்பாக வரிசைப்பட்டு நிற்கின்றது.

இச்சொற்றொடரானது யோவானால் மட்டுமே சபையைப் பற்றிய விவரிப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வார்த்தையை அவர் தம் பயன்பாட்டில், சபையின் பரலோக மற்றும் பூலோக நிலைமைகள் ஒன்றுடன் ஒன்று இணைத்து வைத்தார் (வெளி. 21:2, 9; 22:17). இருப்பினும் இயேசு மாற்கு 2:19ல் சபையை ஒரு மணவாட்டியாக மறை முகமாய்ச் சுட்டிக்காட்டினார், பவுல் கூட 2 கொரி. 11:2ல் அவ்விதமாகவே

*சுட்டிக்காட்டினார். இப்படிப்பட்ட மற்ற மறைமுக சுட்டிக் காட்டுதல்களில், எபேசியர் 5:22-33ல் பவுலின் ஒப்பீடும், ரோமர் 7:1-4ல் அவரது ஒப்புவமையும் உள்ளடங்குகின்றன.*

*சபையைக் கிறிஸ்துவின் மணவாட்டியாகச் சிந்தித்துப் பார்த்தல் என்பது சபையின் இயல்பு மற்றும் பண்பு பற்றிய இன்னொரு கண்ணோட்டத்தை நமக்குக் கொண்டு வருகின்றது. சபையின் இருப்புக்கான நோக்கம் என்னவாக உள்ளது என்பதை நாம் முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு அதை(சபையை)ப் பற்றி விளக்குவதற்குப் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்திய சொற்றொடர்கள், உருவகங்கள் மற்றும் சித்தரிப்புகள் எல்லாவற்றையும் எடை நிறுத்துப் பார்க்க வேண்டும்.*

*சபைக்கு பயன்படுத்தப்படுகையில் மணவாட்டி என்ற இந்த உருவகமானது தரும் ஆலோசனை என்ன?*

## கேள்வி கேட்கப்படாத பற்றுறுதி

*முதலாவதாக, "மணவாட்டி" என்ற சொற்றொடரானது உண்மையுள்ள தன்மையை தெரியப்படுத்துகின்றது. மணவாட்டி ஒரு உறுதிப்பாட்டை ஏற்படுத்தியிருக்கின்றாள்; அவள், அன்பு, பற்றுறுதி மற்றும் வாழ்வு ஆகியவை தேவைப்படும் ஒரு உடன்படிக்கையில் உட்புகுந்திருக்கின்றாள்.*

*கொரிந்தியர்கள் உண்மைக் கிறிஸ்துவிலிருந்து ஒரு பொய்யான இயேசுவுக்கும் மற்றும் ஒரு பொய்யான சுவிசேஷத்திற்கும் திரும்பி விட்டனரோ என்று பவுல் பயந்தார். இதன் விளைவாக, கொரிந்தியர்கள் உறுதித் தன்மையோடும் தூய்மையோடும் இருக்கும்படி வற்புறுத்துவதற்கு, அவர் சாத்தியமான அளவுக்குப் பலமான மொழி நடையைப் பயன் படுத்தினார்: "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக் காகத் தேவவைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்" (2 கொரி. 11:2). ஒரு மணவாட்டி தன் கணவனைக் காட்டிக் கொடுத்தல் என்பது நினைத்துப் பார்க்க முடியாதது, எனவே கிறிஸ்துவினிடம் கிறிஸ்தவர்கள் கொண்டிருக்க வேண்டிய மெய்யான பற்றினை விளக்கப்படுத்துவதற்கு, திருமண ஒப்பந்த உறவு என்பதைப் பவுல் பயன்படுத்தினார்.*

*கணவன் - மனைவி ஒன்றிணைதல் என்பதைக் காட்டிலும் வேறு எந்த விளக்கம் பற்றுறுதியைப் பற்றி அதிகமான ஆலோசனை கூறுவதாக இருக்கும்? பிரிக்கப்பட்டு வாழ்வதைக் காட்டிலும் ஒன்று கூடி மரிப்பதைத் தேர்ந்து கொண்ட கணவர்கள் மற்றும் மனைவியர்கள் பற்றி நம்மில் பெரும் பாலோர் கேள்விப்பட்டிருக்கின்றோம். அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அவர்களுடைய இருதயங்களின் ஒப்புக்கொடுத்தலானது அவர்களின் வாழ்வை விட அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.*

*கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருத்தல் என்பதே சபையின் ஒரே ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் ஆகும். அவரது மக்கள் வெற்றி யடையவோ, வளமாகவோ அல்லது வாழவோ கூட தேவையில்லை -*

அவர்கள் கிறிஸ்துவுக்கு உண்மையாக இருத்தல் மட்டுமே அவசியமானது (வெளி. 2:10). வேறெந்த உறவு (லூக். 14:26), உடைமை (லூக். 14:33), அல்லது பற்றுறுதி (லூக். 14:27) ஆகியவற்றைக் காட்டிலும் அவருக்கான நமது உறுதிப்பாட்டை நாம் மிக உயர்வானதாக மதிக்க வேண்டும்.

## தனிச் சிறந்த ஓர் அடையாளம்

இரண்டாவதாக, சபை கிறிஸ்துவின் மணவாட்டியாய் இருக்கின்றதென்ற கருத்தானது ஓர் அடையாளத்தை மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றது. நாம் நமது அன்புகள் எல்லாவற்றையும் ஒரு அன்பாகக் குறுக்கிக் கொண்ட மக்கள் குழுவாய் இருக்கின்றோம், மற்றும் மனதின் ஒருமைத் தன்மையுடன் கிறிஸ்துவுடன் நாம் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். ஆகையால் ஒரு கணவனும் மனைவியும் எவ்விதத்தில் ஒருவருக்கொருவர் உரியவராகின்றனரோ அவ்விதமாகவே கிறிஸ்து நமக்கும், நாம் கிறிஸ்துவுக்கும் உரியவர்கள் ஆகின்றோம். நாம் கிறிஸ்துவை நமது தலையாக நோக்கி, அவரது பெயரை அணிந்து கொள்ளுகின்றோம், மற்றும் அவர் நம்மை இப்பூமியில் அவரது சரீரமாக எடுத்துக் கொண்டு நம்மை அவரது சபை என்று அழைக்கின்றார்.

திருமணம் என்பது கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் புதிய அடையாளம் ஒன்றினை அர்த்தப்படுத்துகின்றது, ஆனால் இது மனைவிக்கு விசேஷமாக உண்மையாய் உள்ளது, ஏனெனில் அவள் வாழ்வு முழுவதற்குமான திருமண ஒப்பந்தத்தில் பிரவேசிக்கும் வகையில், அவளது கணவரின் பெயரை ஒரு புதுப் பெயராக பெறுகின்றாள். அதுபோலவே, நாம் சபைக்குள் பிரவேசித்து, "கிறிஸ்துவின் சபையாரில்" (ரோமர் 16:16) ஒரு பாகம் ஆகும் பொழுது, கிறிஸ்துவுடனான நமது ஐக்கியத்திலிருந்து வெளிப்படுகின்ற ஒரு புதிய அடையாளத்தில் நாம் பிரவேசிக்கின்றோம்.

கணவரும் மனைவியும் ஒன்றாகும் வண்ணமாகத் தேவன் திருமணத்தை ஏற்பாடு செய்துள்ளார்: ''இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்'' (ஆதி. 2:24). அதுபோலவே, மாற்றத்தில் நாம் கிறிஸ்துவுடன் ஒன்றாகின்றோம் (ரோமர் 6:3). இந்த ஒருமைப்பாடானது கணவரும் மனைவியும் திருமணத்தில் அனுபவிக்கின்ற ஒருமைப்பாட்டினால் மிகச் சிறப்பாக விளக்கப்படுவதில் மிகுந்த ஆழ்ந்தறிவுள்ளதாகும்: ''அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; ... கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ... நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும் ... இருக்கிறோம்" (எபே. 5:28-30).

ஒரு கிறிஸ்தவராகுதல் என்பது தவிர, ஒரு நபர் ஏற்படுத்தும் பிரதான உறுதிப்பாடுகளில், திருமணம் என்பது மிக முக்கியமானதாக இருக்கலாம். திருமண உறவில் பிரவேசிக்கும் ஒருவர் மாறுபட்ட நபராகின்றார் என்ற அளவுக்கு திருமண உறவானது வழக்கத்திற்கு மாறாகத் தனிச் சிறப்புடைய

தாக உள்ளது. அவர் திருமணத்திற்கு முன்பு ஒருவராயிருந்தார், ஆனால் திருமணத்தில் அவர் இருவராகின்றார். அவர் திருமணத்திற்கு முன்பு அவராகவே இருந்தார், ஆனால் திருமணத்தில் அவர் இன்னொரு வரு(ளு)க்கு உரியவராகின்றார். இதே போன்றதொரு வழிமுறையில், புதிய ஏற்பாட்டு சபையில் நாம் பிரவேசிக்கையில், நாம் கிறிஸ்துவின் சரீரமாக ஆகின்றோம். இனியும் நாம் நாமாக இருப்பதில்லை; நாம் கிறிஸ்தவர்களா கியிருக்கின்றோம், கிறிஸ்துவுடனான நமது ஒருமைத் தன்மையினால் நாம் அடையாளப்படுத்தப் படுகின்றோம்.

## மிகவும் மேம்பட்ட உறவு

மூன்றாவதாக, ஒரு மணவாட்டி ஒரு விசேஷித்த, தொடர்ந்து இருக்கும் ஒரு உறுதிப்பாடாக மணவாளனுக்கு நிலைத்திருக்கின்றாள். இந்த பூமியில் உள்ள வேறு எந்த உறவும் ஒரு மணவாட்டிக்கும் அவளது மணவாளனுக்கு முள்ள உறவு போன்ற அதே வகையில் அமைவதில்லை.

சபையானது கிறிஸ்துவுடன் கொண்டுள்ள பிணைப்பை பவுல் எபேசியர் 5:22-33ல் கணவன் - மற்றும் - மனைவியின் உறவுமுறையின் விரிவாக்கத்துடன் விவரித்தார். அவரது விளக்கமானது கிறிஸ்தவ திருமணத்தில் தேவன் கணவனுக்கும் மனைவிக்கும் கொடுத்துள்ள பணிப் பொறுப்பை விளக்கப் படுத்துகின்றது, ஆனால் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையே உள்ள இணைப்பே அவரது அடிப்படைக் கவனமாக உள்ளது (எபே. 5:32).

ஏவுதலினால், பவுல் அவரது ஒப்பீட்டில் கீழ்ப்படிதலின் மீது வலியுறுத்தத்தை வைக்கின்றார். கிறிஸ்துவின் மணவாட்டி என்ற வகையில் சபையானது தனது தலைவர் என்ற வகையில் கிறிஸ்துவுக்குத் தன்னைக் கீழ்ப்படுத்துகின்றது. அவர், "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்'' (எபே. 5:22, 23) என்று கூறினார். ஒரு மனைவி தன் கணவருக்குக் கீழ்ப்படிகிறதுபோல சபையானது கிறிஸ்துவைத் தனது தலைவராக நோக்குகின்றது.

"சர்வாதிகாரி முழு நிறைவானவராக இருந்தால், சர்வாதிகார அரசே ஒரு முழு நிறைவான அரசாக உள்ளது'' என்று யாரோ ஒருவர் கூறியிருக்கின்றார். முழு நிறைவான கிறிஸ்துவுக்குச் சபை கீழ்ப்படிகின்றது, இவ்விதமாக அது முழுநிறைவான தலைமைத்துவத்தை மகிழ்வுடன் அனு பவிக்கின்றது. மனிதர் யாரையும், மனிதர்களின் குழு எதையும், இந்தப் பூமியில் உள்ள எந்தத் தலைமையகத்தையும் சபையானது தன் மேல் அதிகாரமுள்ளதாக நோக்குவதில்லை. கிறிஸ்துவின் உண்மையான சபையானது கர்த்தராகிய கிறிஸ்துவையே ஒரே ஒரு தலைவராகக் கொண்டுள்ளது.

வேதாகம வகுப்பொன்றில் நான் எபே. 5:22-33ஐப் பற்றிக் கலந்துரை யாடும் போதெல்லாம், வசனம் 23 கணவருக்கல்ல, மனைவிக்கே உரியது

என்றும், வசனம் 25 மனைவிக்கல்ல கணவருக்கே உரியது என்றும் நான் குறிப்பிடுவதுண்டு. மனைவிக்கான வார்த்தை "கீழ்ப்படிதல்" என்பதாகவும், கணவருக்கான வார்த்தை "தியாகம்" என்பதாகவும் உள்ளது. பவுலின் கூற்றுப்படி ஒரு நல்ல கணவர் குறைந்தபட்சம் பின்வரும் இரண்டு பண்புகள் உடையவராய் இருப்பார்: (1) கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்தது போல அவர் (கணவர்) தமது மனைவியின்மேல் தியாகமான அன்புகூரு பவராய் இருப்பார், மற்றும் (2) அவர் (கணவர்) தம் மனைவிக்கு மிக உயர் தரமான ஆவிக்குரிய தலைமைத்துவத்தைத் தர நாடுவார். அது போலவே, பவுலின் கூற்றுப்படி, ஒரு நல்ல மனைவியும் குறைந்தபட்சம் பின்வரும் இரண்டு பண்புகள் உடையவராய் இருப்பார்: (1) அவர் தன் தலை என்ற வகையில் தனது கணவருக்குக் கீழ்ப்படிவார், மற்றும் (2) சபையானது கிறிஸ்துவை அன்பு செய்ய வேண்டிய முறையில் அவர் தம் கணவரை அன்பு செய்வார்.

அவரது (கிறிஸ்துவின்) சபையில் பிரவேசித்து அவரது சபையாராய் இருந்தாலின்றி எவரொருவரும் கிறிஸ்துவுடன் தனிப்பட்ட இந்த மணவாட்டி/மணவாளன் உறவுமுறையைக் கொண்டிருக்க முடியாது. ஒரு மனிதரின் மனைவி என்ற சிறப்புரிமையை வேறு எந்தப் பெண்ணுக்கும் கொடுக்கப்பட முடியாது என்பதைப் போலவே, வேறு எந்த நிறுவனமும் அல்லது அமைப்பும் அது ஊழியத்தில் எவ்வளவு புகழ் பெற்றிருப்பினும் அல்லது ஒப்புக் கொடுத்திருப்பினும் கிறிஸ்துவுடன் ஒரு மணவாட்டி/மணவாளன் என்பதன் சிறப்புரிமையைக் கொடுக்கப்பட முடியாததாக உள்ளது.

## அளவிடப்பட முடியாத அளிப்புகள்

நான்காவதாக, கிறிஸ்துவின் மணவாட்டியாய் இருத்தல் என்பது கிறிஸ்துவின் பராமரிப்பு மற்றும் அன்பு ஆகியவற்றின் அளிப்புகளைப் பெற்றிருத்தல் என்று அர்த்தப்படுகின்றது. இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவருடைய மணவாட்டிக்கு வரும் ஆசீர்வாதங்களை முழுவதும் யாரால் புரிந்து கொள்ள முடியும்?

தொடக்கமாக, இயேசு தம்முடைய சபைக்கு இரட்சிப்பை அளிக்கின்றார். பவுல் கிறிஸ்துவை "சரீரத்தின் இரட்சகர்" (எபே. 5:23) என்று குறிப்பிட்டார். அவர் (இயேசு) தமது ஜீவனை சபைக்காகக் கையளித்ததின் மூலம் அதற்கு இந்த ஜீவனைக் கொண்டு வந்தார்: "... அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, ... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:25-27). மற்றும் இயேசு சபையை *நிலைநிறுத்து கின்றார்*. "கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறது போல" (எபே. 5:29) கணவர் தம் மனைவியைப் போஷிக்க வேண்டும் என்று பவுல் கூறினார். இயேசு, சபையின் *பரிசுத்தத்தைக்* காத்து அதன் எதிர்காலத்தைப் பாதுகாப்பானதாகச் செய்கின்றார்: "தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றது

*மான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:26, 27).*

---

*கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசித்தல்*
*என்பது, மணவாட்டி தனது மணவாளனின்*
*அன்பான பராமரிப்பின்கீழ் வருதல் போன்று,*
*நம்மைக் கிறிஸ்துவின் பராமரிப்பு மற்றும்*
*அன்பு ஆகியவற்றின்கீழ் கொண்டு வருகின்றது.*

---

பிள்ளைகள் (மற்றும் வயதில் மூத்தவர்களும் கூட) சின்ட்ரெல்லாவின் வசீகரிக்கும் கதையை மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர். கொடுமைப் படுத்தப்பட்ட அடிமைப் பெண் ஒருத்தி கடைசியில் ஒரு இளவரசனைத் திருமணம் செய்து கொள்ள முடிந்தது, என்ற கருத்தினால் நாம் இன்ப மூட்டப்படுகின்றோம். அந்தக் கதையினை அதன் முடிவுக்கு அப்பால் நாம் எடுத்துச் செல்வோம். "அந்தக் கதையின் மீதிப் பகுதி" என்னவாக இருந்தது? இளவரசனின் மனைவி என்ற வகையில் சின்ட்ரெல்லாவின் வாழ்வு எப்படியிருந்தது? வாழ்வு அவளுக்கு எவ்வளவு மாறுபட்டதாய் இருந்தது? முன்பு ஏழ்மை, அடிமை வேலை, திட்டு வாங்குதல் மற்றும் நம்பிக்கை குலைவு ஆகியவற்றுக்குப் பழக்கப்பட்டிருந்த அவள் தனது புதிய இல்லத்திலும் வாழ்விலும், வசதி, செல்வம், உதவி மற்றும் மகிமையான ஒரு எதிர்காலம் ஆகியவற்றை அறிய வந்தாள். இளவரசனுடன் அவளுடைய திருமணமானது அவளுக்குப் புதியதொரு அடையாளத்தையும், புதிய தொரு வாழ்வையும் மற்றும் எண்ணற்ற சந்தோஷங்களையும் கொண்டு வந்தது.

கிறிஸ்துவின் சரீரத்தினுள் பிரவேசித்தல் என்பது, மணவாட்டி தனது மணவாளனின் அன்பான பராமரிப்பின்கீழ் வருதல் போன்று, நம்மைக் கிறிஸ்துவின் பராமரிப்பு மற்றும் அன்பு ஆகியவற்றின் கீழ் கொண்டு வருகின்றது. கிறிஸ்துவின் பாதுகாத்தலுக்கான வாக்குத்தத்தத்தை சபை மாத்திரமே பெற்றிருக்கின்றது.

## இணையற்ற வாக்குத்தத்தம்

ஐந்தாவதாக, கிறிஸ்துவின் மணவாட்டி என்ற வகையில் சபையானது கிறிஸ்து மகிழ்வுடன் அனுபவிக்கவிருக்கும் அதே எதிர்காலத்தைத் தானும் மகிழ்வுடன் அனுபவிக்கும். கிறிஸ்து செல்லுமிடத்திற்கு சபை செல்லும், கிறிஸ்து பெறுகின்றதை சபை பெறும், மற்றும் அது கிறிஸ்துவுடன் நித்தியத்திற்கும் வாழும்.

சபையுடன் தொடர்புடைய வகையில் "மணவாட்டி" என்ற வார்த்தை யின் குறிப்பிட்ட பயன்பாடானது வெளி. 21 மற்றும் 22ல் காணப் படுகின்றது. சபையின் அடைவிடத்துடன் அதன் இயல்பை இணைவு

படுத்துவதற்காக யோவான் இவ்வார்த்தையைப் பயன்படுத்தினார். முதலில் அவர், "... புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது" (வெளி. 21:2) என்று எழுதினார். பின்பு, "... நீ இங்கே வா, ஆட்டுக்குட்டி யானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக் கிறேன்" (வெளி. 21:9) என்று ஒரு தூதனால் அவருக்குக் கூறப்பட்டது. பின்பு அவர் பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் ஆவியிலே கொண்டு போகப்பட்டு "தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டு தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறதை" (வெளி. 21:10, 11) காண்பிக்கப்பட்டார். வெளிப்படுத்தின விசேஷமானது ஆவி மற்றும் மணவாட்டி ஆகியோரின் அழைப்புடன் முடிவடைகின்றது: "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக் கடவன்" (வெளி. 22:17).

ஆவியானவருடைய கூற்றின்படி, சபையானது பூமிக்குரிய நிலையில் கிறிஸ்துவுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணாகவும், அதன் பரலோகத்திற்குரிய நிலையில் அது கிறிஸ்துவின் மனைவியாகவும் காணப்பட வேண்டியதாக உள்ளது. இது 2 கொரி. 11:2ல் உண்மையுள்ள தன்மைக்கான பவுலின் புத்தி கூறுதலுடன் பொருந்துகின்றது: "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகை யாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்த படியால், உங்களுக்காகத் தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்."

நடைமுறையாகும் திருமணமே நிச்சயதார்த்தத்தின் நிறைவேற்றமாக உள்ளது. புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம், கணவருக்காக அலங்கரிக்கப் பட்ட மனைவியைப் போலப் பரலோகத்திலிருந்து இறங்கி வந்ததைப் பற்றிய தரிசனத்தை யோவான் விளக்கப்படுத்தினார்; மற்றும் அவர் இந்த தரிசனத்தை சபையானது நிச்சயதார்த்தத்திலிருந்து திருமணத்திற்குள் செல்லும் நிகழ்ச்சியாக விளக்கப்படுத்தினார். இவ்வுருவகமானது சபையின் இயல்பினுடைய சேர்க்கையாக உள்ளது, இது "மணவாட்டி" என்ற சொற்றொடரால் அடையாளப் படுத்தப்படுகின்றது, ஆட்டுக்குட்டியான வரின் மனைவி என்ற வகையில் பரலோகத்திலிருந்து இறங்கி வரும் சபையின் எதிர்காலத்துடன் இது சித்தரிக்கப்படுகின்றது.

இயேசு தம்முடைய சரீரமாகிய தம்முடைய சபையை இரட்சிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கின்றார் (எபே. 5:23), ஆனால் வேறு எந்த நிறுவனத்தையும் அல்ல. அவரது சபையின் எதிர்காலமானது முன்பு ஏற்படுத்திய வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமாகவும், பொல்லாங்கின் மீது வெற்றியாகவும் வெளிப்படுத்தின விசேஷத்தில் சித்தரிக்கப்படுகின்றது. நீங்கள் நித்திய நகரத்தை நாட வேண்டுமென்றால், அவருடைய சபையில் கிறிஸ்துவுக்கு உண்மையுடன் இருத்தல் மூலமாக அதை நாடும்படி வேத வசனங்கள் உங்களுக்கு வழி காட்டுகின்றன.

## கறைபடாத அழகு

ஆறாவதாக, ''மணவாட்டி'' என்ற வார்த்தையானது அழகினை அறிவிக்கின்றது. மணவாட்டியின் அழகிய தன்மைக்கு மேலானது ஒன்றுமில்லை. அவளது வசீகரமும் வனப்பும் பழமொழி சார்ந்தவைகளாக உள்ளன.

யோவான், ''நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கி வரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்த மாக்கப்பட்டிருந்தது'' (வெளி. 21:2) என்று எழுதினார். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பற்றி ஏசாயா எழுதுகையில், மணவாட்டியின் வசீகரத்தை அவர் ஒரு விளக்கமாகப் பயன்படுத்தினார்: "கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களி கூர்ந்திருக் கிறது; மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளு கிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளு கிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்'' (ஏசா. 61:10). மற்றும் அவர் தேவனுக்கு உண்மையுடைய மக்களை மணவாட்டியின் பிரகாசத்திற்கு ஒப்பிட்டார்: "... மணவாளன் மணவாட்டியின் மேல் மகிழ்ச்சியாயிருப்பது போல, உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார்" (ஏசா. 62:5).

மணமகள் தனது திருமண ஆடையை அணிந்து கொண்டு திருமண விழாவில் நடந்துவரும் வரைக்கும் அந்தத் திருமண ஆடையை மணமகன் காண அனுமதிக்காதிருக்கும் பழக்கமானது அமெரிக்காவில் தம்பதியர்கள் பலரால் மதிக்கப்படும் ஒரு வழக்கமாக உள்ளது. இந்த வழக்கத்தைப் பின்பற்றி, மணவாட்டி உண்மையிலேயே "அவளது மணவாளனுக்காக அலங்கரிக்கப்பட்டாள்." மணவாளன் முதன்முதலாக அவளைக் காணும் பொழுது, அவளுடைய அழகு விளக்கிக் கூற முடியாததாக இருப்பதாகக் காண்கின்றார்.

கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையானது நீதியின் ஆடைகளி னாலும், பரிசுத்தம் என்னும் திருமண ஆடையினாலும் அணிவிக்கப் பட்டுள்ளது. பவுல், ''கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:27) என்று எழுதினார்.

சபையானது கிறிஸ்துவுக்கு அழகு நிறைந்ததாக உள்ளதென்றால், அது உலகத்திற்கும் அழகு நிறைந்ததாகவே இருக்கும். இது, "உங்கள் பண்பைக் கவனமாய்க் காத்துக் கொள்ளுங்கள், உங்கள் பண்பானது உங்கள் புகழ்ச்சியைக் கவனமாய்க் காத்துக் கொள்ளும்'' என்ற பழமையான உரையைப் போன்றதாக உள்ளது. கிறிஸ்துவின் வசனத்தின் மூலமாக சபையானது தூய்மையாய் நிலைத்திருந்து, இவ்விதம் அது கிறிஸ்துவுக்கு அழகு நிறைந்ததாக இருக்கையில், உலகில் அதன் புகழ்ச்சியும் கூட அது இருக்க வேண்டிய விதத்தில் இருக்கும்.

சபையானது வசனத்தில் தரித்திருப்பதினால், கிறிஸ்துவுக்கு விசுவாசத் துடன் இருப்பதினால் பரலோகத்தில் கிறிஸ்துவுடனான திருமணத்திற்குத் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகின்றது. தேவனுக்கு முன்பாகக் குற்றமற்ற பண்பையும் கறைபடாத ஆவியையும் பராமரிப்பதன் மூலம் நாம் அந்த விசேஷ நாளுக்கென்று நம்மை ஆயத்தப் படுத்துகின்றோம்.

## முடிவுரை

ஒரு மணவாட்டி தனது மணவாளனுக்காக அலங்கரித்துக் கொள்வதைக்காட்டிலும் அதிக அழகு நிறைந்தது எது? “மணவாட்டி” என்ற வார்த்தையில் அழகு, தூய்மை மற்றும் நீடித்து நிற்கும் பற்றுறுதி ஆகிய யாவும் தெரிவிக்கப்படுகின்றன. சபையின் இயல்பை விளக்கப் படுத்து வதற்குப் பரிசுத்த ஆவியானவர் இந்த உருவகத்தை ஏன் தேர்ந்தெடுத்தார் என்று காண்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. சபையானது கிறிஸ்து வுக்கு நிலைநிறுத்திக் கொள்ளும் தனிச் சிறந்த ஒரு உறவை, கிறிஸ்துவுக்கு சபையின் பற்றுறுதியை, கிறிஸ்து சபைக்குக் கொடுக்கின்ற அடையாளத்தை, மற்றும் சபைக்காக கிறிஸ்து சேமிப்பில் வைத்துள்ள எதிர்காலத்தை நாம் இந்தச் சொற்றொடரில் காண்கின்றோம். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் பெற்றுள்ள மேன்மையான சூழ்நிலைகளையும் பெரும் வேட்கை களையும், நமது கட்டுப்பாடுகள் மற்றும் நமது வாய்ப்புகள் ஆகிய வற்றையும் இந்தச் சித்தரிப்பானது நமது சிந்தைக்குக் கொண்டு வருகின்றது. இது கிறிஸ்துவின் அருகில் சபை பெற்றுள்ள அன்பான மகிமையுள்ள இடத்தினால் நமது சிந்தையில் பெருக்கெடுக்கச் செய்கின்றது.

சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கின்ற இந்த அளவில், அவரது சபையின் உறுப்பாக இருக்க விரும்பாதவர் யார்? கிறிஸ்துவின் மணவாட்டியாக இருத்தல் என்பது எவ்வளவு சிலாக்கியமானதாக உள்ளது! கிறிஸ்துவின் சபைக்குள் பிரவேசியாத எவரும், கிறிஸ்துவைப் பின்பற்று பவராக வாழாமல் இருக்கின்ற எவரும் நிச்சயமாகவே சபையின் இயல்பைப் புரிந்து கொண்டிருப்பதில்லை.

ஒருவேளை யாரேனும் ஒருவர் உங்களுக்கு நீங்கள் விரும்பும்படி செலவு செய்யக்கூடுவதற்குப் பெரும் செல்வம் ஒன்றை உங்களுக்கு அளிப்பதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்களா? ரீடர்ஸ் டைஜஸ்ட் என்ற பத்திரிக்கையின் போட்டியாளர் பணப் பரிசான பத்து மில்லியன்/ஒரு கோடி டாலர் (சுமார் 52 கோடி ரூபாய்) பணத்தை யாரேனும் ஒருவர் மறுத்து விடுவார் என்று நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா? அந்தப் பணம் உங்களுக்கு வெகுமதியாய் அளிக்கப்பட்டால், அதைக் குறித்து அக்கறையற்று இருப்பீர்களா? “ஐம்பத்தி இரண்டு கோடி ரூபாயா, ஊம்? மன்னியுங்கள், எனக்கு அதில் ஆர்வம் இல்லை” என்று நீங்கள் கூறிவிடுவீர்களா? பதில் தெளிவானதாக உள்ளது. நீங்கள் பெற்றுக்கொண்ட செல்வங்களில் நீங்கள் அதிக உணர்வுப் பூர்வமாக அகம் மகிழ்வீர்கள்.

கிறிஸ்துவின் சபைக்குள் பிரவேசிக்கும்படியும், அவரது மணவாட்டி

*யாக வாழும்படியும் அவர் தரும் அழைப்பானது பூமியின் அனைத்து செல்வங்கள் மற்றும் சந்தோஷத்தின், மகிமையின் நிலைகள் யாவற்றையும் கடந்து நிற்கின்றது. இங்கும் நமது தற்காலத் திறமைகளினால் புரிந்து கொள்ளப்படுவதற்கு அப்பால் உள்ள நித்தியத்திலும் நமக்கு ஏராளமாக அளிக்கவல்ல இயேசுவுடனான நித்திய உறவில் பிரவேசிக்கும்படி அது உங்களை அழைக்கின்றது.*

"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ் நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் ... என்றார். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" *(அப். 2:38, 47).*

## படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. ஒரு மணவாட்டியின் பண்புகளை அட்டவணைப்படுத்துக.
2. புதிய ஏற்பாட்டின் எந்த எழுத்தாளர் சபையை "கிறிஸ்துவின் மணவாட்டி" என்று திட்டவட்டமாகக் குறிப்பிடுகின்றார்?
3. கிறிஸ்துவுக்குப் பற்றுறுதியுடன் இருத்தல் என்பது எதனை அர்த்தப்படுத்துகின்றது?
4. திருமணமானது நமது அடையாளத்தை எவ்விதம் மாற்றுகின்றது?
5. திருமணம் என்பது நாம் ஏற்படுத்தும் பலத்த உறுதிப்பாடுகளில் ஒன்றாக உள்ளதென்று நீங்கள் கூறுவீர்களா?
6. "கீழ்ப்படிதல்" என்ற வார்த்தை அர்த்தப்படுத்துவது என்ன?
7. "சர்வாதிகாரி முழு நிறைவானவராய் இருந்தால் சர்வாதிகார அரசே முழு நிறைவான அரசாக உள்ளது" என்ற கூற்றினைப் பற்றிக் கலந்துரையாடவும். இந்தக் கூற்றைக் கிறிஸ்துவுடன் தொடர்பு படுத்தவும்?
8. எபே. 5:22-33ன்படியாக ஒரு கணவர் தம் மனைவியிடம் எவ்விதம் அன்புகூர வேண்டும்?
9. கிறிஸ்து தம்முடைய சபைக்கு அளிக்கின்றது என்ன?
10. கிறிஸ்துவின் சபையானது என்ன வகையான எதிர்காலத்தைப் பெற்றுள்ளது? இந்த எதிர்காலத்தை உங்கள் சொந்த வார்த்தைகளில் விவரிக்கவும்.
11. சபையை "கிறிஸ்துவின் மணவாட்டி" என்று சிந்திக்கையில் உங்கள் மனதிற்கு வருகின்ற பிரதான பண்புகள் யாவை?
12. கிறிஸ்து தம்முடைய சபைக்கு இரட்சிப்பை வாக்குத்தத்தம் செய்துள்ளாரா? வேறு எதாவது சபைக்கு அவர் இரட்சிப்பை வாக்குத்தத்தம் செய்திருக்கின்றாரா?